# குர்ஆன் மற்றும் ஆதாரப்பூர்வமான ஸுன்னாவிலிருந்து

# “ருக்யா” நோயின் போது ஓதவேண்டியவைகள்

# 1. சூராதுல் ஃபாதிஹா ஓதுதல்

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ ١

ٱلۡحَمۡدُ لِلَّهِ رَبِّ ٱلۡعَٰلَمِينَ ٢

ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ ٣ مَٰلِكِ يَوۡمِ ٱلدِّينِ

٤ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِينُ ٥

ٱهۡدِنَا ٱلصِّرَٰطَ ٱلۡمُسۡتَقِيمَ ٦ صِرَٰطَ

ٱلَّذِينَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ غَيۡرِ ٱلۡمَغۡضُوبِ

عَلَيۡهِمۡ وَلَا ٱلضَّآلِّينَ ٧

سورة الفاتحة

## 2. ஆயதுல் குர்ஸி ஓதுதல்

ٱللَّهُ لَآ إِلَٰهَ إِلَّا هُوَ ٱلْحَىُّ ٱلْقَيُّومُ ۚ لَا
تَأْخُذُهُۥ سِنَةٌ وَلَا نَوْمٌ ۚ لَّهُۥ مَا فِى ٱلسَّمَٰوَٰتِ
وَمَا فِى ٱلْأَرْضِ ۗ مَن ذَا ٱلَّذِى يَشْفَعُ عِندَهُۥٓ إِلَّا
بِإِذْنِهِۦ ۚ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ ۖ وَلَا
يُحِيطُونَ بِشَىْءٍ مِّنْ عِلْمِهِۦٓ إِلَّا بِمَا شَآءَ ۚ وَسِعَ
كُرْسِيُّهُ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ ۖ وَلَا يَـُٔودُهُۥ
حِفْظُهُمَا ۚ وَهُوَ ٱلْعَلِىُّ ٱلْعَظِيمُ ٢٥٥

## 3. சூரதுல் பகராவுடைய கடைசி இருவசனங்களை ஓதுதல்

﴿ ءَامَنَ ٱلرَّسُولُ بِمَآ أُنزِلَ إِلَيۡهِ مِن رَّبِّهِۦ وَٱلۡمُؤۡمِنُونَۚ
كُلٌّ ءَامَنَ بِٱللَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ وَكُتُبِهِۦ وَرُسُلِهِۦ
لَا نُفَرِّقُ بَيۡنَ أَحَدٖ مِّن رُّسُلِهِۦۚ وَقَالُواْ سَمِعۡنَا وَأَطَعۡنَاۖ
غُفۡرَانَكَ رَبَّنَا وَإِلَيۡكَ ٱلۡمَصِيرُ ٢٨٥ لَا يُكَلِّفُ ٱللَّهُ نَفۡسًا
إِلَّا وُسۡعَهَاۚ لَهَا مَا كَسَبَتۡ وَعَلَيۡهَا مَا ٱكۡتَسَبَتۡۗ رَبَّنَا
لَا تُؤَاخِذۡنَآ إِن نَّسِينَآ أَوۡ أَخۡطَأۡنَاۚ رَبَّنَا وَلَا تَحۡمِلۡ
عَلَيۡنَآ إِصۡرٗا كَمَا حَمَلۡتَهُۥ عَلَى ٱلَّذِينَ مِن قَبۡلِنَاۚ
رَبَّنَا وَلَا تُحَمِّلۡنَا مَا لَا طَاقَةَ لَنَا بِهِۦۖ وَٱعۡفُ عَنَّا
وَٱغۡفِرۡ لَنَا وَٱرۡحَمۡنَآۚ أَنتَ مَوۡلَىٰنَا فَٱنصُرۡنَا
عَلَى ٱلۡقَوۡمِ ٱلۡكَٰفِرِينَ ٢٨٦ ﴾

# 4. சூரதுல் ஃபலக் ஓதுதல்

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

﴿قُلْ أَعُوذُ بِرَبِّ ٱلْفَلَقِ ١

مِن شَرِّ مَا خَلَقَ ٢

وَمِن شَرِّ غَاسِقٍ إِذَا وَقَبَ ٣

وَمِن شَرِّ ٱلنَّفَّٰثَٰتِ فِى ٱلْعُقَدِ ٤

وَمِن شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ ٥﴾

## 5. சூரதுன் நாஸ் ஓதுதல்

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

قُلۡ أَعُوذُ بِرَبِّ ٱلنَّاسِ ١
مَلِكِ ٱلنَّاسِ ٢
إِلَٰهِ ٱلنَّاسِ ٣ مِن شَرِّ
ٱلۡوَسۡوَاسِ ٱلۡخَنَّاسِ ٤ ٱلَّذِى
يُوَسۡوِسُ فِى صُدُورِ ٱلنَّاسِ
٥ مِنَ ٱلۡجِنَّةِ وَٱلنَّاسِ ٦

# ஸுன்னாவில் வரக்கூடிய பிரார்த்தனைகள்

இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (மரணத்தின்) தவணை வராத நோயாளியை பார்க்க வந்து அவரிடத்தில் (பின்வரக்கூடிய பிரார்த்தனையை) ஏழு தடவைகள்:

أَسْأَلُ اللَّهَ الْعَظِيمَ رَبَّ الْعَرْشِ الْعَظِيمِ أَنْ يَشْفِيَكَ

மிக மகத்தான அர்ஷின் இறைவனான மிக மகத்தானவன் அல்லாஹ்விடத்தில் அவன் உன்னை குணப்படுத்த வேண்டுகிறேன்!.




என்று சொல்வாரேயானால் அவரை அல்லாஹ் அந்த நோயிலிருந்து குணப்படுத்திவிடுகிறான்.

ஆதாரம்: அபூ தாவுத்: 3106.



உஸ்மான் இப்னு அபில் ஆஸ் அஸ்ஸகஃஃபிய்யி (ரளி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் தான் இஸ்லாத்தை ஏற்றதிலிருந்து தன் உடம்பில் உள்ள வலியை முறையிட்டார்கள்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள்,

"நீர் உமது உடலில் வலியுள்ள இடத்தில் கையை வைத்து, **"பிஸ்மில்லாஹ்"** என மூன்று தடவைகள் கூறிவிட்டு, ஏழு தடவைகள்

**أَعُوذُ بِاللهِ وَقُدْرَتِهِ مِنْ شَرِّ مَا أَجِدُ وَأُحَاذِرُ**

"அஊது பில்லாஹி வ குத்ரத்திஹி மின் ஷர்ரி மா அஜிது வ உஹாதிரு" என்று சொல்வீராக" என்றார்கள்.

(பொருள்: நான் அல்லாஹ்விடம் அவனது ஆற்றலைக் கொண்டு, நான் உணர்கின்ற, நான் அஞ்சுகின்ற தீமையிலிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன்.)

ஸஹீஹ் முஸ்லிம்: 2202.

ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ‘ஒரு நோயாளியிடம் (உடல்நலம் விசாரிக்கச்) சென்றால்’ அல்லது ‘நோயாளி ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் கொண்டுவரப்பட்டால்’ அவர்கள், ‘

أَذْهِبِ الْبَاسَ رَبَّ النَّاسِ، اشْفِ وَأَنْتَ الشَّافِي، لاَ شِفَاءَ إِلَّا شِفَاؤُكَ، شِفَاءً لاَ يُغَادِرُ سَقَمًا

‘அத்ஹிபில் பாஸ் ரப்பந் நாஸ் இஷ்ஃபி, வ அன்த்தஷ் ஷாஃபி, லா ஷிஃபாஅ இல்லா ஷிஃபாஉக்க, ஷிஃபாஅன் லா யுஃகாதிரு சகமன்” என்று பிரார்த்திப்பார்கள்.

(பொருள்: மக்களின் இறைவனே! கடும் வேதனையைப் போக்கு! குணப்படுத்து! நீயே குணப்படுத்துபவன். குணமாகுதல் இல்லை நீ குணப்படுத்தினாலே தவிர. நோயில்லாதவாறு குணப்படுத்து!. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி: 5675.

أَعُوذُ بِاللهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ مِنْ هَمْزِهِ، وَنَفْخِهِ، وَنَفْثِهِ

மிகக் கேட்கக்கூடியவனான மிக அறிந்தவனான அல்லாஹ்விடம் விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அவனுடைய வீண் ஊசலாட்டத்தை விட்டும், அவன் உள்ளத்தில் ஏற்படுத்தும் பெருமையான எண்ணத்தை விட்டும், பழிப்பிற்குரிய அவனுடைய கவிகளை விட்டும் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.

ஆதாரம்: ஸுனன் அபூ தாவூத்: 775.

அபூஸயீத் அல்குத்ரீ (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:
நபி (ஸல்) அவர்களிடம் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்து, "முஹம்மதே! உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளதா?" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "ஆம்" என்று பதிலளித்தார்கள். அப்போது,

بِاسْمِ اللّٰهِ أَرْقِيْكَ، مِنْ كُلِّ شَيْءٍ يُؤْذِيكَ، مِنْ شَرِّ كُلِّ نَفْسٍ أَوْ عَيْنِ حَاسِدٍ، اَللّٰهُ يَشْفِيْكَ بِاسْمِ اللّٰهِ أَرْقِيْكَ

"பிஸ்மில்லாஹி அர்கீக்க, மின் குல்லி ஷைஇன் யுஃதீக்க, மின் ஷர்ரி குல்லி நஃப்ஸின் அவ் அய்னின் ஹாஸிதின், அல்லாஹு யஷ்ஃபீக்க, பிஸ்மில்லாஹி அர்கீக்க" என்று கூறினார்கள்.

(பொருள்: அல்லாஹ்வின் பெயரால் உமக்கு ஓதி பாதுகாப்புத் தேடுகிறேன். உமக்குத் தொல்லை தரும் ஒவ்வொரு பொருளிலிருந்தும், ஒவ்வொரு ஆத்மாவின் அல்லது பொறாமைக்காரனின் கண்ணின் தீங்கிலிருந்தும். அல்லாஹ் உம்மை குணப்படுத்துவானாக!. அல்லாஹ்வின் பெயரால் உமக்கு ஓதி பாதுகாப்புத் தேடுகிறேன்.) ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்: 2186.

நோயாளி தனக்கு ஓதிபார்க்கும் போது:

**بِاسْمِ اللهِ أَرْقِيْ نَفْسِيْ، مِنْ كُلِّ شَيْءٍ يُؤْذِيْنِيْ، مِنْ شَرِّ كُلِّ نَفْسٍ أَوْ عَيْنِ حَاسِدٍ، اَللهُ يَشْفِيْنِيْ بِاسْمِ اللهِ أَرْقِيْ نَفْسِيْ**

(பொருள்: அல்லாஹ்வின் பெயரால் எனக்கு ஓதி பாதுகாப்புத் தேடுகிறேன். எனக்குத் தொல்லை தரும் ஒவ்வொரு பொருளிலிருந்தும், ஒவ்வொரு ஆத்மாவின் அல்லது பொறாமைக் காரனின் கண்ணின் தீமையிலிருந்தும். அல்லாஹ் என்னை குணப்படுத்துவானாக!. அல்லாஹ்வின் பெயரால் எனக்கு ஓதி பாதுகாப்புத் தேடுகிறேன்..)

இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நபி (ஸல்) அவர்கள், ஹஸன் (ரளி) மற்றும் ஹுஸைன் (ரளி) ஆகியோருக்காக (அல்லாஹ்விடம்) பாதுகாப்புத் தேடிவந்தார்கள்.

أَعُوذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّةِ، مِنْ كُلِّ شَيْطَانٍ وَهَامَّةٍ، وَمِنْ كُلِّ عَيْنٍ لاَمَّةٍ

“அஊது பி கலிமாத்தில்லாஹித் தாம்மாத்தி மின் குல்லி ஷைத்தானின் வ ஹாம்மத்தின் வ மின் குல்லி ஐனின் லாம்மத்தின்”

(பொருள்: “அல்லாஹ்வின் முழுமையான சொற்களைக் கொண்டு ஒவ்வொரு ஷைத்தானிடமிருந்தும் விஷமுள்ள பிராணியிடமிருந்தும் தீய எண்ணத்துடன் தீண்டும் ஒவ்வொரு கண்ணிலிருந்தும் பாதுகாப்புத் தேடுகிறேன்”

இந்தச் சொற்களின் மூலம் உங்கள் இருவரின் தந்தை(யான இப்ராஹீம் (அலை) அவர்கள் தம் மகன்களான) இஸ்மாயீல் (அலை) மற்றும் இஸ்ஹாக் (அலை) ஆகியோருக்காகப் பாதுகாப்புத் தேடிவந்தார்கள் என்றும் கூறுவார்கள். ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி: 3371.